# ரவி ரண்டால் மாதாஜி ஆலயம்

## சாந்திப்பிரியா



ரவி ரண்டால் மாதாஜி என்ற ஆலயம் குஜராத் மானிலத்தில் மிகவும் பிரபலமானது. ராஜ்கோட் நகரில் இருந்து 90 கல் தொலைவில் டௌதா என்ற இடத்தில் உள்ளது அந்த ஆலயம். அற்புதமான வாசவாடி எனும் நதி அந்த ஆலயம் உள்ள கிராமத்தின் வழியே ஓடுகின்றது. சுமார் 1100 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தைச் சார்ந்தது என நம்பப்படும் அந்த ஆலயத்திற்கு சென்று வேண்டுபவர்களின் வேண்டுதல்கள் நிச்சயமாக நிறைவேறுவதாக கூறுகின்றனர். குழந்தை இல்லையா ? குருடனா அங்கு வந்து வேண்டினால் குணமாவது நிச்சயம் என்று நம்பப்படுவதால்

சராசரியாக நான்காயிரம் முதல் ஐந்தாயிரம் வரையிலான மக்கள் ஒவ் ஒரு மாதமும் அங்கு வருகிறார்களாம்.

ரவி ரண்டால் மாதாஜி யார்? அந்த புராணக் கதை இதுதான். அவள் தேவலோகத்தில் இருந்தவள். தொழிலாளிகள் வணங்கும் விஸ்வகர்மாவின் மகள். அவளுடைய அழகில் மயங்கிய சூரிய பகவான் அவளை மணக்க விரும்பினார். ஆனால் சூரிய பகவானின் குடும்பத்தினருடன் தமக்கு நெருங்கிய சம்மந்தம் இருந்தும் சூரிய பகவானுடைய வேண்டுகோளை ஏற்க விஸ்வகர்மா மறுத்து விட்டார்.

இப்படி இருக்கையில் ஒருமுறை ரவி ரண்டாலுடைய தாயார் சூரிய பெருமானின் வீட்டிற்குச் சென்று மண் பாத்திரம் ஒன்றை கடனாகப் பெற்றுக் கொண்டு வந்தார். அதைக் திருப்பிக் கொகொடுக்கும் முன் அந்த பாத்திரம் உடைந்து விட்டால் அவளுடைய மகளைத் தன்னுடைய மகனுக்குத் திருமணம் செய்து தந்து விட வேண்டும் என்ற நிபந்தனையை சூரிய பகவானின் தாயார் போட்டு இருந்தாள். இதுதான் தக்க சமயம் எனக் காத்திருந்த சூரியனார் இரண்டு மாடுகளை அனுப்பி வழியில் சென்று கொண்டிருந்த ரவி ரண்டாலுடைய தாயார் முன் சென்று சண்டை போடுமாறும், அப்பொழுது அவள் மீது மோதி, அவளுக்கு காயம் ஏற்படாமல் அந்த மண் பாத்திரத்தை மட்டும் தள்ளி உடைத்து விடுமாறும் கூறி அனுப்பினார். அப்படியே நிகழ்ச்சியும் நடந்தன. வேறு வழி இன்றி ரவி ரண்டால் சூரியனாரை மணக்க வேண்டியதாயிற்று.

திருமணமான சூரிய பகவானுக்கும் -ரவி ரண்டாலுக்கும் ஒரு மகனும் ஒரு மகளும் பிறந்தனர். சூரிய பகவான் தக தகவென ஜொலித்துக் கொண்டு இருந்ததினால் ரவி ரண்டாலினால் அவரை நேரடியாகப் பார்க்க முடியவில்லை. அதை தவறாகப் புரிந்து கொண்டார் சூரியனார். அவள் கர்வம் கொண்டு தன்னைப் பார்க்காமல்

அலட்சியமாக இருக்கின்றாள் என எண்ணியவர் அவளுக்குப் பிறந்த தன்னுடைய குழந்தைகள் காட்டில் சுற்றி அலைந்தபடி தவிக்கட்டும் என சாபமிட்டு விட்டார். குழந்தைகள் தவித்தால் தாயார் மன நிம்மதி இழந்து விடுவாள் என்ற நம்பிக்கையில் அப்படி சபித்து விட்டார்.

அதனால் மனம் வருந்திய ரண்டால் தேவி சூரியனார் மீது கோபமுற்று எவருக்கும் தெரியாமல் தன்னுடைய சக்தியினால் தன்னைப் போலவே வேறு ஒரு உருவத்தை அங்கே உருவாக்கி வைத்துவிட்டு குழந்தைகளையும் அங்கேயே விட்டுவிட்டு தன் தந்தை வீட்டிற்குச் சென்று விட்டாள். ஆனால் திருமணமானப் பெண்கள் கணவனைப் பிரிந்து தந்தையின் வீட்டிற்கு கணவன் சம்மதம் இன்றி வந்தால் ஏற்றுக் கொள்ள முடியாது என்று இருந்த நியதியினால் விஸ்வகர்மா அவளை வீட்டில் இருக்க அனுமதிக்கவில்லை. ஆகவே வேறு வழி இன்றி கணவன் வீடும் செல்ல மனமின்றி காட்டுக்குள் சென்று தன்னை ஒரு குதிரையாக மாற்றிக் கொண்டு பல்லாயிரம் ஆண்டுகள் தவத்தில் இருந்தாள்.

காலம் ஓடியது. சூரியனாருக்கும் ரவி ரண்டாலின் மாற்று உருவப் பெண்ணுக்கும் இரண்டு குழந்தைகள் பிறந்தன. பிறந்த குழந்தைகளில் ஒருவனுக்கும் ரண்டால் தேவியின் முதல் மகனுக்கும் ஒரு நாள் சண்டை ஏற்பட, அதில் தலையிட்ட மாற்று உருவப் பெண், ரவி ரண்டாலின் மகன் கால்கள் பூமியில் பதிந்தால் அவன் உடம்பில் உள்ள இரத்தம் வெளியேறும் என சாபமிட்டாள். வீடு திரும்பிய சூரியனாரிடம் தன்னுடைய தாயார் (அவனுக்கும் அவள் தன்னுடைய சின்ன தாயார் எனத் தெரியாது) கொடுத்த சாபம் குறித்து உண்மையான ரவி ரண்டாலின் மகன் கூற, ஒரு தந்தை வேண்டுமானால் ஆத்திரத்தில் தன் குழந்தை என்று கூடப் பார்க்காமல் சபிப்பார்,ஆனால் ஒரு தாய் தன் மகனுக்கு நிச்சயம்

சாபம் தரமாட்டாள் என்பதை உணர்ந்து கொண்டவர் அவள் மீது சந்தேகம் கொண்டு அவனை சாபமிட்டதிற்கான காரணத்தைக் கூறுமாறு நிர்பந்தம் செய்தார். அவளும் தன்னைப் பற்றிய உண்மைகளைக் கூறி விட்டாள்.

அதிர்ச்சி அடைந்த சூரியனார் உடனே ரண்டால் தேவி வீட்டிற்கு சென்று அவள் இருக்கும் இடம் குறித்து விஜாரித்த பொழுது அவர்கள் அவள் அங்கு இல்லை, எங்கோ சென்று விட்டாள் என்ற உண்மையைக் கூறினர். அதைக் கேட்டு வருந்தியவர் தன்னுடைய சக்தியால் அவள் இருக்கும் இடத்தைக் கண்டு பிடித்து, தன்னையும் ஒரு குதிரையாக மாற்றிக் கொண்டு அவளிடம் சென்று சமாதானம் செய்து மீண்டும் அவளை தன்னிடம் அழைத்து வந்தார். திருமணம் ஆன பின் உண்மையிலேயே அவளால் ஜொலிக்கும் முகத்தைக் பார்க்க முடியவில்லை என்ற உண்மையை உணர்ந்ததும் அவளுக்கும் தன்னைப் போலவே ஜொலிக்கும் சக்தியைத் தந்து நான்கு இடங்களில் அவள் சக்தி பூமியில் வெளிப்படும் என ஆசி கூறினார். அவர்கள் அங்கு குதிரை உருவில் இருந்த பொழுது மேலும் இரு குழந்தைகள் அவர்களுக்குப் பிறக்க அவர்கள் ஆயர்வேத மருத்துவ முறைக்கு அதிபதியாக்கப்பட்டனர்.

அதன் பின் இருவரும் சுயரூபம் அடைந்து வீடு திரும்பியதும் மாயையான ரண்டால் தேவி தனக்கு நல்கதி தருமாறு சூரியனாரிடம் வேண்டிக் கொள்ள, ரண்டால் தேவி தான் பூமிக்குச் சென்று வாழ இருப்பதாகவும், தம்முடன் அவளையும் வந்து விடுமாறும், பூமியில் எவர் ஒருவர் விரதம் இருந்து தம்மை வணங்குவார்களோ அவர்களுக்கு அனைத்தையும் தருவேன் என்றும், தம்மிடம் வருபவர்கள் தன்னுடைய மாற்று உருவையும் சேர்த்து வணங்க வேண்டும் எனவும் முடிவு செய்தாள். அது மட்டும் அல்ல அந்த விரத நாட்களில் சூரியனாரும் குதிரையாக அவர்களுடன்

ஆராதிக்கப்படுவார்கள் என்றும் அவர்கள் மூவரையும் ஒரு சேர ஆராதனை செய்யாவிடில் விரதம் நிறைவு பெறாது என்றும் கூறினாள்.

பின்னர் சௌராஷ்டிர மானிலத்தில் இருந்த ஒரு பகுதிக்கு சென்று அங்கு ஒரு மரத்தடியில் ஊமைக் குழந்தை வடிவில் அமர்ந்து விட்டாள். அந்த பிரதேசத்தில் அந்த நேரத்தில் பஞ்சம் தலை விரித்தாடியது. காட்டில் தனிமையில் இருந்த குழந்தையைக் கண்ட ஒரு விவசாயி அதை தன் வீட்டிற்கு எடுத்துச் சென்றான். ஊமைக் குழந்தையை ஊருக்குள் கொண்டு சென்றதும் அடுத்த நாளே நல்ல மழை பெய்து நிலங்கள் செழிப்பாயின. அவனுடைய முடமான மற்ற குழந்தைகள் ஆச்சரியமாக நலம் அடைந்தனர். எவருக்கும் காரணம் புரியவில்லை. காலம் ஓடியது. ஊரும் செழுமையாயிற்று.

ஒரு நாள் பக்கத்து ஊரைச் சேர்ந்த மன்னன் ரண்டாலை சிறு பெண் போன்ற அழகிய உருவில் கண்டான். அவளை மணக்க விரும்பி அணுகியபோது, அவளை வளர்த்தவர்கள் அவளை திருமணம் செய்து கொடுக்க மறுத்து விட்டனர். அதனால் கோபம் அடைந்தவன் அந்த ஊரின் மீதுப் படை எடுத்து வந்து பலரைக் தாக்கி கொன்றான். அதைக் கண்ட சிறு பெண் உருவில் இருந்த ரண்டால் தேவி வெகுண்டு எழுந்தாள். தன் சுயரூபத்தைக் காட்டும் விதத்தில் அனைவர் முன்னிலையிலும் ஒரு பசுவை சிங்கமாக மாற்றி, காட்டிய பின்னர் மன்னனுடைய சேனையினருடன் போரிட்டு அவர்களைக் கொன்று குவிக்கத் துவங்க, மன்னன் உண்மையை உணர்ந்து கொண்டான். தானே நேரடியாக அங்கு வந்து அவளிடம் வந்து மன்னிப்புக் கோரி சரணாகதி அடைந்தான்.

அவள் யார் எனப் புரிந்ததும் அனைத்து மக்களும் அவளை வணங்கி தங்களுடைய தெய்வமாக ஏற்று, ஆலயம் அமைத்துக்

கொண்டாடினர். அவளை வழிபட்டு விரதம் இருந்தால் நிச்சயமாக குழந்தைப் பாக்கியம் கிடைக்கும், பேச முடியாதவர்களுக்கு பேச்சு வரும், தீராத நோய்கள் தீரும், கஷ்டங்கள் விலகும், வாழ்வில் ஒளி வரும் என்ற நம்பிக்கை அந்த கிராமத்தில் நிலவுகின்றது.

# Ravi Randal Devi

## Santhipriya



Ravi Randall Mataji Temple is one of the most famous temples in the state of Gujarat. The temple is located in village Dautha, 90 km from Rajkot. The magnificent Vasavadi river flows through the village where the temple is located. Those who visit the temple, which is said to be 1100 years old say, that the prayers of the devotees are fulfilled and those who had no children, those blind and with other ailments are cured miraculously. On an average four to five thousand people come to this shrine every month.

Who is Ravi Randall Mataji? There is a folklore on her appearance. She was daughter of Lord Viswakarma and lived with him in heaven. Lord Sun who was mesmerized by her beauty wanted to marry her. But Viswakarma refused to accept Lord Surya's request despite the fact that both the families were known to each other well.

Once Ravi Randal's mother went to the house of Lord Surya and borrowed a pot made of clay pot on a condition that if she does not return the pot unbroken, then her daughter has to marry her son Lord Surya and Randal's mother accepted the condition. Lord Sun arranged a trick to get the pots broken and sent two cows to fight on way through which Ravi Randal's mother was going and push the pot down without hurting Ravi Randall's mother. Everything happened as preplanned by him and fallen pot broke. Therefore Ravi Randal had to marry Lord Sun without any other option.

A son and a daughter were born to the couple Lord Surya and Ravi Randal. Since the sun rays of Lord Surya was too bright to look at, Ravi Randal avoided looking at his face which was misunderstood by Lord Surya as insult to him due to her arrogance and cursed that her children would wander in the forest. Lord Surya thought that by punishing her children she would lose their peace of mind and suffer as punishment for insult shown to him.

Upset at the curse on her children, Goddess Randal became really angry with Lord Sun and created a shadow image of her with her power, left her at her place in the house of Lord Surya and left the home without telling anyone. Since the bride's family does not keep their daughters at their home when they returned deserting their husband and without his consent, Lord Viswakarma too sent her away refusing to give asylum. Therefore Goddess Ravi Randal went to the forest, converted her into a mare and wandered alone for several thousands of years.

As time passed two more children were born to Lord Surya through Ravi Randall's shadow woman. Lord Surya did not know that the real Ravi Randal has already left him and with whom he was living was her mirror woman. One day a fight broke out between one of the son's of the shadow woman of Ravi Randal and the son of real Ravi Randal. Furious over real Ravi Randall's son, the mirror imaged woman cursed him that blood would come out of the body if his legs touched the land. When Lord Surya heard of it, he was firm that a mother would not curse her son in such manner even at height of anger and so when he compelled her to tell the facts as to why she cursed her own son, she had to reveal him the truth that she was not real Ravi Randal, but her shadow.

The shocked Lord Sun immediately went to Randal Devi's home and when inquired about her whereabouts he heard that she had gone

somewhere else unknown to them. However with his divine power, when Lord Sun found her place of stay and the form in which she lived, he too transformed himself into a horse, went to her and compromised with her. In their reunion in the form of horse and mare, they further got two more sons who were made custodians of Ayurveda medicine. Thereafter both of them returned back to their home again. The shadow woman requested him to forgive her and show alternate way to live. However Goddess Ravi Randal decided to go to earth to stay there and asked her shadow woman too accompany her. She pronounced that whoever in earth worshipped them along with a horse through short period of penance, they would be blessed by them abundantly. Unless the devotees in penance worshipped all three together, the Vrath would not remain completed.

One day the King of the neighboring town attracted by the beauty of little Randal, approached her foster parents to get her married to him, but they refused to let her married to him. Therefore the King invaded his place and killed everyone who opposed him on way. Furious over the act of the King Goddess Randal Devi, who was in the form of a small girl, got up and turned a cow into a lion and fought alone with the King's army and killed many of them. Realizing his folly, and understanding the power of Goddess Randal Devi, the King surrendered to her and apologized to her.

From then on everyone began to worship her and accepted her as their goddess and set up a temple for her. There is a belief in the village that if one worship her with devotion their prayers would be answered positively. The belief is those without child beget children, who cannot speak able to speak, chronic diseases get cured and their hardships gets removed.